# கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்ளுடன் இணங்காமை

இலங்கை கணக்கீட்டு நியமம் 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு இணங்க பணிக்கொடை ஒதுக்கீடு தொடர்பாக அதிகாரசபையின் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆண்டின் போது இரண்டு வாகனங்களுக்குரிய பெறுமானத் தேய்வு ஏற்பாடு ரூபா 159,241 ஆல் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 32 உத்தியோகத்தர்களுக்கான பணிக்கொடை கொடுப்பனவு ஒதுக்கீடு ரூபா 296,742 ஆல் கூடுதலாகவும் 13 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 110,791 ஆல் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கீழே காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகள் பதிவேடுகள் / பட்டோலைகள் என்பவற்றுடன் இணங்கவில்லை.

| விபரம் | கணக்கின் பிரகாரம் மீதி | பதிவேடுகள் / பட்டோலைகள் பிரகாரம் மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா: | ரூபா |
| பிரயாணச் செலவினம் | 1,116,258 | 1,143,421 | 27,163 |
| ஏனைய செலவினம் | 1,656,091 | 1,696,634 | 40,543 |

### 1.2.4 கணக்காய்விற்காக சான்றுகளின்மை

07 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 279,005,389 கூட்டுப் பெறுமதியான மீதிகள் தொடர்பாக பேரேட்டுக் கணக்குகள், செயலாற்றல் அறிக்கை, பொருள் பெறுவனவுக் குறிப்புக்கள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் | |
| நி.பி 757 | மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | (i) 6.5.1 | 2011 ஆம் ஆண்டிற்கான வரைவு ஆண்டறிக்கை கணக்குகளுடன் சமர்பிக்கப் பட்டிருக்கவில்லை |
| | | (ii)6.5.3 | 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டிற்கான அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் அதிகார சபையின் செயற்பாட்டு விளைவு ரூபா 142,233 ஆன மிகையொன்றாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டில் ரூபா 45,870 தொகையான பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது நிதிசார் விளைவுகளில் ரூபா 188,103 ஆன சாதகமான விலகல் அவதானிக்கப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டினுள் அரசின் நன்கொடை ரூபா 5,162,777 ஆலும் அதிகாரசபையின் வருமானம் ரூபா 5,393,043 ஆலும் அதிகரித்தமை மேற்குறித்த சாதகமான விலகலுக்கு காரணமாக அமைந்திருந்தது.

(அ) (i) அதிகாரசபையால் 2011 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடும் போது கழிவுப்பொருள் மீள்சுழற்சி சேவைக்கட்டணம் ரூபா 209,500 ஆலும் அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 161,000 ஆலும் விண்ணப்பக் கட்டண வருமானம் ரூபா 11,000 ஆலும் குறைவடைந்திருந்தது.

(ii) மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கு உள்ளடக்கப்பட்ட எண்ணைய் பரிமாற்றம் மற்றும் ஏனைய (Bunkering மற்றும் Other ( Fine / Penalties) ஆகிய இரண்டு வருமானங்களில் உள்ளவாறான வருமான உழைப்பு 100% ஆல் குறைவடைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா 9.2 மில்லியனாக இருந்ததுடன், அது மொத்த வருமான உழைப்பின் 14.5% ஆக இருந்தது. முன்னைய ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா 4.8 மில்லியனாக இருந்ததுடன், அது மொத்த வருமான உழைப்பின் 9% ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் 2011 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், ஆண்டின் மொத்த நிதிஏற்பாடு ரூபா 35,000,000 தொகையாக இருந்ததுடன், ஆண்டின் செயன் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், உள்ளவாறான செலவினம் ரூபா 25,098,320 ஆக இருந்தது. அது தொடர்பாக கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 8 செயற்பாடுகளுக்கான நிதிஏற்பாடுகளை மிகைத்து ரூபா 2,052,230 தொகை செலவிடப்பட்டிருந்தன.

(ஆ) 3 செயற்பாடுகளுக்கான நிதிஏற்பாடுகளான ரூபா 1,100,000 தொகை சேமிக்கப்பட்டிருந்தன.

(இ) 8 செயற்பாடுகளுக்கான நிதிஏற்பாடுகளில் 50% அல்லது அதற்கு மேற்பட்ட தொகை சேமிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் தலைவரால் "2011 ஆம் ஆண்டில் மூலதன நிதிஏற்பாட்டிலிருந்து ரூபா 12.32 மில்லியன் தொகை அதிகாரசபைக்கு திறைசேரியால் விடுவிக்கப்படவில்லையென" அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ஈ) செயல் நடவடிக்கைத் திட்டத்திலுள்ள செயற்பாடுகளில் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள் பெயரிடப்பட்டிருக்கவில்லை.

(உ) சர்வதேச நியதிகள் கையொப்பமிடல் ("Signing International Conventions") செயற்பாட்டிற்காக 2010 ஆம் ஆண்டில் ரூபா 30,000 தொகையும் 2011 ஆம் ஆண்டில் ரூபா 450,000 தொகையான நிதிஏற்பாடும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், இச்செயற்பாடுகள் 2 ஆண்டுகளிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 3.2 பதவியணியினர் சம்பளக் கடன்

அதிகாரசபைக்கு கிடைத்த வருமானத்திலிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 6.176 தொகை பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட ஊழியர்களுக்காக சம்பளக் கடன்/ இடர்கடன் யோசனைத் திட்டத்திற்காக திறைசேரி அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை.. 2011 ஆம் ஆண்டில் ரூபா 4,939,000 கடன்தொகையாக செலுத்தப்பட்டிருந்ததுடன், ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் 12 மாதச் சம்பளம், சம்பளக் கடனாக செலுத்தப்பட்டிருந்தது. 2011 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அந்நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்த சம்பளக் கடன் மீதி ரூபா 6,257,776 ஆக இருந்தது.

## 3.3 சர்வதேச சமுத்திர தினத்தை கொண்டாடுதல்

சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை மூலம் சர்வதேச சமுத்திர தினம் ஜெட்லைனர் கப்பலில் 2011 யூன் 08 ஆம் திகதி கொண்டாடுவதற்காக நடாத்தப்பட்ட நினைவு விழாவிற்காக அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டமும் நிதிச் செலவினத்திற்காக பணிப்பாளர் சபைப் பத்திரம் ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இதற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 600,000 ஆக இருந்த போதும் உள்ளவாறான செலவினம் ரூபா 1,234,351 தொகையாக இருந்ததுடன், ஒதுக்கப்பட்ட தொகையை மிகைத்து ரூபா 634,351 அதாவது 106% செலவிடப்பட்டிருந்தது. இச்செலவினத்தை மேற்கொள்வதற்காக திறைசேரி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இதற்காக அச்சிடப்பட்ட 1000 ''சத் சமுத்தர'' சஞ்சிகைப் பிரதிகளுக்காக ரூபா 183,000 தொகை 2011 யூன் 13 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்ததுடன், 2011 திசெம்பர் 29 ஆம் திகதி வரை பகிர்ந்தளிக்கப்படாமல் எஞ்சியிருந்த புத்தகங்கள் 165 ஆக இருந்தது.

### 3.4 களஞ்சியக் கட்டுப்பாடு

நி.பி 754 இன் பிரகாரம் 2011 ஆம் ஆண்டின் இறுதியில் பொருட் பதிவேடு இணக்கம் செய்யப்படாமல் இருந்ததுடன், ஆண்டின் போது ரூபா 6,035,071 ஆன பொருட்கள் களஞ்சியத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், பொருள் பெறுவனவுக் குறிப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 பயன்படுத்தப்படாத மற்றும் குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்

ஆய்வுகூடத்திற்காக உபகரணங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பாக தெரிவுப் பரிசோதனையின் போது ரூபா 2,501,100 ஆன கொள்வனவுகள் 2010 திசெம்பர் மாதத்தில் இடம்பெற்றிருந்ததாக அவதானிக்கப்பட்டது. அத்துடன் அவ் உபகரணங்கள் ஓராண்டு காலமாக எவ்வித செயற்பாட்டிற்கும் பயன்படுத்தாமல் ஆய்வுகூடத்தில் வைக்கப்பட்டிருந்தது. மேலும் ஆய்வுகூடத்தில் 12 பரிசோதனைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அப்பரிசோதனைகள் கணக்காய்வு தினமான 2011 திசெம்பர் வரை மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், பரிசோதனைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த உபகரணங்களும் மூலப்பொருட்களும் பயன்படுத்தப்படாமல் இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.6 ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் 8.3.9 பந்திக்கு முரணாக அதிகாரசபைக்குச் சொந்தமான வாகனமொன்றை சுற்றாடல் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும். அமைச்சில் அவ்வாகனம் இருக்கவில்லை. எவ்வாறாயினும் இவ்வாகனத்தின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக அதிகாரசபையால் ரூபா 31,184 செலவிடப்பட்டிருந்தது.

### 3.7 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 143 ஆக இருந்ததுடன், 03 பதவிகளுக்காக நி.பி 71 இன் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. உள்ளவாறான பதவியணியினர் 107 ஆக இருந்தன. 2011 ஆம் ஆண்டில் 36 பதவிகளுக்கு வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்காக அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆண்டின் போது 21 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(அ) 2009 ஆகஸ்ட் 20 ஆம் திகதிய 09/1483/360/049 அமைச்சரவை பத்திரத்தின் பிரகாரம் வருடாந்த புதுப்பித்தலுக்கு உட்பட்ட 2009 ஒக்தோபர் 01 ஆம் திகதி முதல் 2013 மார்ச் 16 ஆம் திகதி வரை அதிகாரசபையின் பொது முகாமையாளரின் சேவை வருடாந்தம் புதுப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. 2010 ஒக்தோபர் 01 ஆம் திகதி முதல் கணக்காய்வு தினமான 2011 திசெம்பர் 09 ஆம் திகதி வரை ஓராண்டு காலமாக சேவை நீடிப்புச் செய்யப்படாமல் பதவியில் இருந்து கொண்டு சம்பளமாக ரூபா 668,310 தொகை செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக தலைவரால் “செயலாளரின் முன் அனுமதிக்காக 2012 மே மாதத்தில் எழுத்துமூல வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது” என பதில் அளிக்கப்பட்டிருந்தது.

## 3.8 வாகனப் பயன்பாடு

---------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் 31 இல் நிறுவனத்தினுள் 08 வாகனங்கள் காணப்பட்டதுடன், அதில் 02 ஒதுக்கப்பட்ட வாகனங்களாகவும், 06 குழாம் வாகனங்களாகவும் இருந்தன. ஆண்டின் போது எரிபொருளுக்காக ரூபா 817,535 உம் வாகனப் பராமரிப்பிற்காக ரூபா 870,474 உம் செலவிடப்பட்டிருந்த போதும் ஓட்டப்பதிவேடுகளும் சம்பவப் பதிவேட்டுக் குறிப்புக்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

(ஆ) அதிகாரசபைக்குச் சொந்தமான வாகனமொன்று 2007 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன், திருத்த நடவடிக்கைகளுக்காக 2010 நவம்பர் 26 ஆம் திகதி ரூபா 865,030 தொகை செலவிடப்பட்டிருந்தது. திருத்த நடவடிக்கைகள் முறையாகச் மேற்கொள்ளப்பட்டுள்ளதென பொறியியலாளரின்

பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2012 மே 15 ஆம் திகதி வரையில் இவ்வாகனத்தின் திருத்த வேலைகளைப் பூர்த்தி செய்து ஓட்டத்தில் ஈடுபடுத்தும் நிலைக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. மேலும் இவ்வாகனத்தின் பதிவுச் சான்றிதழைப் பரிசோதித்த போது அது அமைச்சிற்குச் சொந்தமான வாகனமொன்றாக இருந்ததுடன், 2007 மே 27 ஆம் திகதி அதிகாரசபைக்கு பொறுப்பேற்கப்பட்டு திருத்த நடவடிக்கைகளுக்காக அனுப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்கு நடவடிக்கைகளும் நல்லாளுகையும்

### 4.1 கொள்வனவுத் திட்டம்

2011 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

2011 ஆம் ஆண்டிற்காக உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் கணக்காய்வு நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை. 2011 திசெம்பர் 09 ஆம் திகதி வரை உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன், ஒரு உத்தியோகத்தர் மட்டுமே கணக்காய்வுப் பிரிவிற்கு இணைக்கப்பட்டிருந்தார். ஆண்டின் போது 12 கணக்காய்வு விசாரணைகள் விநியோகிக்கப்பட்டிருந்தன.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள நலிவுகள் காலத்திற்குக் காலம் அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) ஆட்சேர்ப்பு
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) சொத்துக் கட்டுப்பாடு